**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | |
|---|---|
| Case No. | : CC No.155/2024 |
| Deposition of witness for Prosecution | : P.W-3 |
| Name | : செல்வம், வயது 58 |
| Father Name/Husband Name | : சங்கரன் |
| Village | : கழுகுமலை |
| Taluk | : கோவில்பட்டி |
| Calling | : தச்சு வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of March 2025.

**(எதிரி ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கழுகுமலையில் வசித்து தச்சு வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் (பார்வை மகஜரில்) உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அதனை நான் கடந்த 18 ஆம் தேதி 2023 ஆம் வருடம் மாதம் நினைவில் இல்லை மதியம் 12.00 மணியளவில் மகாலிங்கம் வீட்டிற்கு முன்னால் வைத்து கழுகுமலை உதவி ஆய்வாளர் வந்து படம் வரைந்து சாட்சியாக இருக்குமாறு கையொப்பம் கேட்டார்கள்.
2. நானும் மாரியப்பனும் அதில் கையொப்பம் செய்தோம். (**பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. வழக்கில் இறந்த நபர், நீங்கள் மற்றும் உங்களுடன் கையொப்பம் செய்த மாரியப்பன் ஆகியோர் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நீங்கள் ஒரே தெருவில் வசிக்கிறீர்கள் என்றால் இல்லை.
2. நீங்கள் வழக்கில் இறந்த நபரை பார்க்க மருத்துவமனைக்கு சென்றீர்களா என்றால் இல்லை. உங்களிடம் எத்தனை பக்கம்

எழுதிய பேப்பரில் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் ஒரு பக்கம். இறந்த நபருக்கு வேண்டிய நபர் என்பதால் போலிசார் கேட்டுக் கொண்டதன் பேரில் கையொப்பம் செய்து கொடுத்தீர்கள் என்றால் இல்லை வரைந்ததற்கு சாட்சியாக இருக்க வேண்டி கையொப்பம் கேட்டார்கள் செய்து கொடுத்தேன்.

3. நீங்கள் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரியல்ல வரைபடம் வரைந்தது சம்பந்தமாக கையொப்பம் கேட்டார்கள் செய்து கொடுத்தேன்.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.